செ.கு.எண் : 120 நாள் : 08/09/2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## ஓணம் திருநாள் வாழ்த்துச் செய்தி

திருஓணம் திருநாளை வசந்த கால விழாவாக உவகையோடு கொண்டாடி மகிழும் மலையாள மொழி பேசும் மக்கள் அனைவருக்கும் எனது ஓணம் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமால் வாமன அவதாரம் பூண்டு மாபலிச் சக்கரவர்த்தியை அடக்கி, பின்னர் அம்மன்னன் வேண்டிய வண்ணம் மக்கள் அனைவரும் எப்போதும் சுபிட்சமாக இருக்கவும், அவர்களை ஆண்டுதோறும் காண வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் ஏற்று அருள் புரிந்தார். அதன்படி மாபலிச் சக்கரவர்த்தி மக்களைக் காண வரும் நன்னாளே திருவோணம் திருநாளாக கொண்டாடப்படுகிறது.

“அத்தம் பத்து ஓணம்” என்று பத்து நாட்கள் மகிழ்ந்து கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையின் போது தங்கள் வீட்டின் வாயிலில் அரிசி மாவினால் பெரிய கோலமிட்டு, அதனை வண்ணப் பூக்களால் அலங்கரித்து, குத்து விளக்கேற்றி இல்லம் எல்லாம் மணம் கமழ, மக்கள் உள்ளம் எல்லாம் மகிழ, ஓணம் பண்டிகையை கொண்டாடுவர்.

அன்பு, அமைதி, சகோதரத்துவம் வளர்க்கப்பட வேண்டும், அகந்தையும் ஆணவமும் அகற்றப்பட வேண்டும் என்கிற உயரிய கருத்தினை அனைவரும் அறியும் வகையில் மலையாள மொழி பேசும் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் இந்தத் திருஓணத் திருநாளில், அனைவருக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9